# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 216 / 2014. |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 7 |
| Name | : மங்கையர்க்கரசி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.10.2023.

- - - - - - -

1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது, மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 03.06.2013 ஆம் தேதியன்று உசிலம்பட்டி தலைமை மருத்துவமனையில் பணியிலிருந்தபோது, ஒச்சன் என்பவரது மகன் சித்தன், 43 வயது என்பவர் காயங்களுடன் இரவு 08.45 மணிக்கு அவர் தானாகவே சிகிச்சைக்கு வந்தார். அவர் கூறியதாவது தன்னை தனக்குத் தெரிந்த 7 பேர்கள் கம்பி, பட்டாக் கத்தி, கம்பு ஆகியவைகளுடன் 03.06.2013 அன்று மாலை 04.30 மணியில்

கிழக்குத் தெரு நடு முதலைக் குளத்தில் வைத்து தாக்கியதாகக் கூறினார். நான் அவரைப் பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

1. காயம் 1 ன் தன்மை வெட்டுப்பட்ட சிதைந்த காயம் 7 x 1 x 0.5 செ. மீ. அளவில் தலையின் வலது பக்கவாட்டுப் பகுதியில் காணப்பட்டது.
2. காயம் 2 சிராய்ப்புக் காயம் வலது ஆட்காட்டி விரலில் காணப்பட்டது.
3. ஊமைக் காயம் இடது தோள் பட்டையில் காணப்பட்டது.

அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு முதலுதவி செய்து உள்நோயாளியாக 03.06.2013 அன்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு 07.06.2013 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் தான் என்று சான்று வழங்கினேன். நான் வழக்கிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.3. 1வது காயம் பட்டாக் கத்தியால் வெட்டும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். என்னைப் போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1 வது காயம் கூர்மையான கம்பியை வைத்துத் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. 3 காயங்களுமே வேகமாக ஓடி கூர்மையான கல்தூணில் மோதி கீழே விழும்போது ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்றால் வாய்ப்ண்டு.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 20.10.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.